<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>
முன்னிலை : திருமதி.G.ரேஸ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

**2026 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**<u>குற்றவியல் பல்வகை மனு எண்.2010/2025</u>**

**<u>CNR.No.TNPB02-004680-2025</u>**

ஆஷா பீ,
க/பெ. பாஷா,
3/134, முஸ்லீம் தெரு,
வாலிகண்டபுரம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம். ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக
காவல் ஆய்வாளர்
மங்களமேடு காவல் நிலையம்.

... எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்.

இம்மனுவானது கடந்த 28.11.2025 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கடந்த 28.11.2025 அன்றே இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 13.03.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு கூடுதல் பொது வழக்கறிஞர் திரு. சண்முகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற விசாரணையிலிருந்து வந்து, இருதரப்பும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது எதிரியை அசல் வழக்கிலிருந்து விடுவிப்பு செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :</u>**

2. மனுதாரர் தரப்பில் மனுதாரர்/எதிரி மீது இ.த.ச.294(பி), 323, 324, 354, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இ.த.ச பிரிவுகள் 354, 506(1) ன் கீழான குற்றத்திற்கான தண்டனை மூன்று ஆண்டுகள் என்றும் இவ்வழக்கில், இதுநாள் வரையில் போலீசார் தரப்பில் குற்ற இறுதியறிக்கை தாக்கல்

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.13 19:42:53 +0530

செய்யவில்லை என்றும் எனவே இம்மனுதாரரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. இருந்தாலும் நீதிமன்றத்தின் முன்தோன்றி ஆட்சேபனை தெரிவித்தார்.

4.இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில், மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**<u>தீர்வு</u>**

5. மனுதாரர்கள் மனு மற்றும் இந்நீதிமன்றத்தில் உள்ள முதல் தகவல் அறிக்கையை ஆராய்ந்து பார்க்கும்போது, இவ்வழக்கானது மங்களமேடு காவல் நிலையை குற்ற எண்.22/2015, இ.த.ச. 294(b), 323, 324, 354, 506(1)–பிரிவுகளின் கீழ் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் எதிர்மனுதாரரர் தரப்பில் இருந்து குற்ற இறுதியறிக்கை 3 ஆண்டுகளுக்கு கழித்தும் தாக்கல் செய்யவில்லை என்று வாதிடப்பட்டது.

6. மனுதாரர்கள் கோரும் பரிகாராமானது கு.வி.மு.ச பிரிவு 468 (2)–ன் கீழ் ஒரு வழக்கில் ஒரு வருடத்திலிருந்து 3 வருடங்கள் மட்டும் மிகாமல் தண்டணை விதிக்ககூடிய குற்றம் இழைக்கப்பட்டிருந்தால், 3 வருடங்கள் கழித்து அதனை cognizance எடுக்க கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக இ.த.ச பிரிவு 354–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதால், இந்த இ.த.ச பிரிவு 354–ன் படி அதிகபட்ச தண்டணை காலம் 5 வருடம் வரை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்க கூடிய தண்டணையாக உள்ளதனாலும், 5 வருட தண்டணை விதிக்ககூடிய குற்றச்சாட்டிற்கு கு.வி.மு.ச பிரிவு 468 (2)–ன் கீழ் மேற்கண்ட வழக்கிற்கு எந்த ஒரு காலதோஷமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. இவ்வழக்கு முதல் கட்ட விசாரணையில் உள்ளதாலும், இறுதியறிக்கை இது தொடர்பாக தாக்கல் செய்யாததனாலும், இவ்வழக்கினை இ.த.ச பிரிவு 354–ன் படி உள்ள குற்றமாகவே காணமுடியும் என்பதனால், கு.வி.மு.ச பிரிவு 468 (2)–ன் கீழ் காலதோஷம் தடை இவ்வழக்கிற்கு கிடையாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பின்படி, "Ghanshyam Soni vs State NCT Delhi and another 2025 livelaw (SC) 676 held as per section 468(2) (3) crpc the code

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.13 19:42:59 +0530

imposes an obligation on the part of the aggrieded party to take recourse to appropriate forum within the period provided by law and once he takes such action, it would be wholly unreasonable and inequitable if he is told that his grievance would not be ventilated as the court had not taken an action within the period of limitation. Such interpretation of law, instead of promoting Justice would lead to perpetuate injustice and defeat the primary object of procedure in law" it is a settled position of law that for the computation of the limitation period under section 468 Crpc the relevant date is the date of filing of the complaint or the date of institution of prosecution and not the date on which the Magistrate takes congnizance".

9. மேற்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, நிகழ்நிலை புகார்தாரர் இவ்வழக்கில் சம்பவம் நடந்து 1 நாளில் மங்களமேடு காவல் நிலையத்தில் மனுதார்கள் மீது புகார் அளித்துள்ள நிலையில், சம்பவ தொடர்பாக புகார் அளிக்கப்பட்ட நாட்களையே கு.வி.மு.ச பிரிவு 468(2)–ன் கீழ் காலதோஷ வரையரைக்குள் கருத்தில் கொள்ள வேண்டுமே தவிர, இறுதியறிக்கை தாக்கல் செய்யாததனால், மேற்கண்ட வழக்கை இந்நீதிமன்றம் Cognizance எடுக்க முடியாது என்று கருதக்கூடாது. அவர் கு.வி.மு.ச பிரிவு 468(2)–ன் கீழ் வெறும் 3 வருடங்கள் மிகாமல் தண்டணைக்குரிய வழக்கிற்கு தான் காலதோஷ விதிமுறை செல்லும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கில், கு.விமு.ச பிரிவு 468(2)–ன் கீழ் காலதோஷ விதிமுறையை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கினை பொறுத்தவரையில் நிகழ்நிலை புகார்தாரர் சம்பவம் நிகழ்ந்த உடனே காவல் நிலையத்தில் புகார் அளிக்காமல் 1 நாள் கடந்து புகார் அளித்து இருந்தாலும் கூட, அதற்கான காரணத்தை புலன்விசாரணை அதிகாரி தனது புலன்விசாரணையில் தெளிவுப்படுத்த வாய்ப்புள்ளதாலும், வழக்கு நடத்தி அதன் உண்மைதன்மையை கண்டறிந்து இந்நீதிமன்றத்தால் தீர்வு காண முடியும் என்ற அடிப்படையில், வழக்கின் முதல் கட்ட விசாரணை நடந்து கொண்டிருக்கும் இந்த சமயத்தில் புலன்விசாரணை அதிகாரி இறுதியறிக்கையை தாக்கல் செய்யாததை மட்டும் கருத்தில் கொண்டு, இந்நீதிமன்றத்தால், குற்ற எண். 22/2015–ஐ தள்ளுபடி செய்து உத்தரவிட முடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும், கு.வி.மு.ச பிரிவு 468(2)–ன் கீழ் காலதோஷத்திற்குள் இ.த.ச பிரிவு 354–ன் படி 5 ஆண்டுகள் வரை சிறை தண்டணை கொடுக்க கூடிய வழக்கு

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.13 19:43:04 +0530

பொருந்தாது என்பதாலும், "Ghanshyam Soni vs State NCT Delhi and another 2025 livelaw (SC) 676–வழக்கின் படி ஒரு புகாரினை நிகழ்நிலை புகார்தாரர் சம்பவ நடந்து காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்த நாட்களைதான் கருத்தில் கொள்ள வேண்டும் தவிர, புலன்விசாரணை அதிகாரி இறுதியறிக்கை தாக்கல் செய்தததையோ அல்லது இந்நீதிமன்றம் அதனை கோப்பிற்கு எடுத்த நாட்களையோ கருத்தில் கொள்ள கூடாது என்ற அடிப்படையில், இவ்வழக்கானது கு.வி.மு.ச பிரிவு 468(2)–ன் கீழ் 5 வருடங்களுக்கு மேல் தண்டணை கொடுக்கக்கூடிய வழக்கிற்கு காலதோஷத்தினால் பாதிக்கப்படவில்லை என்றும், புலன்விசாரணை அதிகாரி இறுதியறிக்கை தாக்கல் செய்யாததனால், வழக்கை தள்ளுபடி செய்வது நிகழ்நிலை புகார்தாரரையே பாதிப்பிற்குள்ளாக்கும் என்பதையே கருத்தில் கொண்டு, இந்நீதிமன்றம் மேற்கண்ட வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.13 19:43:09 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர், 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.13 19:43:13 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.13 19:43:17 +0530

–நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.